# கொடுஞ்சிறைக்கு அஞ்சாதவனா கொரோனாவுக்கு அஞ்சப் போகிறேன்?

## விழுப்புரத்தில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை...

11–ஆம் பக்கத் தொடர்ச்சி!





அண்ணன் சேலத்துச் சிங்கம் வீரபாண்டியார் அவர்கள் மூலமாக, பெரியவர் அய்யா மருத்துவர் ராமதாசு அவர்களை, தன்னுடைய வீட்டிற்கே அழைத்து, விவாதித்து, ஆட்சிப் பொறுப்புக்கு வந்த 43-ஆவது நாளிலேயே மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான, 20 விழுக்காடு இட ஒதுக்கீட்டை உருவாக்கிக் கொடுத்த வரலாற்றுச் சிறப்புமிக்க முடிவை அமைச்சரவைக் கூட்டத்தில் எடுத்தார்!

இன்றைக்கு கல்வியில், வேலைவாய்ப்பில், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமூகத்துப் பிள்ளைகள் படித்து, வேலைக்குச் சென்று முன்னேறிக் கொண்டிருக்கிறார்கள். அதற்கு, கலைஞர் கொடுத்த இடஒதுக்கீடுதான் மிகமிக முக்கியக் காரணமாக இருக்கிறது.

பிற்படுத்தப்பட்டோருக்கு 30 விழுக்காடு - மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 விழுக்காடு - ஆதி திராவிடர்களுக்கு ஏற்கனவே இருந்த 16 விழுக்காட்டை உயர்த்தி 18 விழுக்காடு - பழங்குடியினருக்கு ஒரு விழுக்காடு என்று சமூகநீதி வரலாற்றில், 69 விழுக்காடு இடஒதுக்கீடு வந்தது.

### சமூகநீதிப் போராளிகளுக்கு கலைஞர் செய்த பெருமைகள்!

சமூகநீதியை நிலைநிறுத்திய இயக்கம் மட்டுமல்ல; சமூகநீதிப் போராளிகளைப் போற்றும் இயக்கமும் தி.மு.க.தான்! உயிர்த் தியாகம் செய்த 21 பேர் குடும்பத்திற்கு மூன்று லட்சம் ரூபாய் கருணைத் தொகையும் - மாதம்தோறும் பென்ஷனும் வழங்கியவர் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள். இன்றைக்கும் அந்தக் குடும்பங்கள் மாதம் 3 ஆயிரம் ரூபாய் பெற்று வருகிறார்கள். அவர்களுக்கு சமூகநீதிப் போராளிகள் என்ற பட்டமும் வழங்கப்பட்டது.

அப்போது சாலைமறியலில் கைதான 2 லட்சம் பேர் மீதான வழக்குகள் திரும்பப் பெறப்பட்டது. அதுமட்டுமல்ல, குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்ட வன்னியர் சங்க நிர்வாகிகளான பு.தா. அருள்மொழி அவர்கள், பு.தா. இளங்கோவன் அவர்கள், வாழைச் செல்வன் அவர்கள், ஆரணி ராசேந்திரன் அவர்கள், தாராசிங் அவர்கள் ஆகிய 5 பேர் மீதான வழக்கும் திரும்பப் பெறப்பட்டது.

திரு. வாழப்பாடி ராமமூர்த்தி அவர்களும், வன்னிய அடிகளார், வன்னியர் கூட்டமைப்பின் நிறுவனத் தலைவர் சி.என். ராமமூர்த்தி ஆகியோர் முதலமைச்சர் தலைவர் கலைஞர் அவர்களைச் சந்தித்து, மரியாதைக்குரிய எஸ்.எஸ். ராமசாமிப் படையாச்சியார் அவர்களுக்கு சென்னையில் ஒரு மையப் பகுதியில் சிலை வைக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தபோது, அன்றைக்கு நான் சென்னை மாநகரத்தின் மேயராக இருந்தேன். தலைவர் கலைஞர் அவர்கள், அவர்களையெல்லாம் என்னிடத்தில் அனுப்பி வைத்தார்கள். சென்னையில் மூன்று இடங்களைக் குறிப்பிட்டு, அவர்கள் என்னிடம் கொடுத்தார்கள். இறுதியாக, சென்னை ஹால்டா சந்திப்பில் ராமசாமி படையாச்சியாருக்கு சிலை அமைக்கப்பட்டது. முதலமைச்சர் கலைஞரும் - நானும் அந்த விழாவில் கலந்து கொண்டோம்.

### தியாகத்தால் பயனடைந்து துரோகியாக மாறியவர்கள்!

வன்னியர் பொதுச்சொத்து வாரியம் அமைக்க வேண்டும் என்று வன்னியர் சமூகத்தின் தலைவர்கள், அன்றைக்கு முதலமைச்சர் கலைஞரிடம் கோரிக்கை வைத்தார்கள். 2009-ஆம் ஆண்டு அதற்கான ஆணை பிறப்பித்ததும் கழக அரசுதான்.

அதன் தொடர்ச்சியாகத்தான், 21 சமூகநீதிப் போராளிகளுக்கு மணிமண்டபம் கட்டி நான் திறந்து வைத்தேன்.

இன்றைக்கு அந்தத் தியாகத்தால் பயனடைந்த சிலர், எப்படியெல்லாம் துரோகிகளாக மாறியிருக்கிறார்கள் என்று உங்களுக்கே நன்றாகத் தெரியும்! மருத்துவர் அய்யா ராமதாசு அவர்களுக்கு, இன்றைக்கு பலர் நம்பிக்கை துரோகம் செய்திருக்கலாம்; ஆனால், தலைவர் கலைஞரும் - நானும் - திராவிட முன்னேற்றக் கழகமும், அவரை என்றைக்கும் சமூகநீதி போராளியாகத்தான் பார்க்கிறோம்; மதிக்கிறோம்!

இன்று N.D.A. என்ற பெயரில் அமைக்கப்பட்டிருக்கும் கூட்டணி என்பதே, துரோகிகளால் - தமிழ்நாட்டிற்கு புதிய துரோகங்கள் செய்ய அமைக்கப்பட்டிருக்கும் கூட்டணி! இவர்களின் துரோகப் பட்டியலை நீங்கள் பார்த்தீர்கள் என்றால் தெரியும்.

### ‘நீட்’ டை அனுமதித்து துரோகம் செய்த அ.தி.மு.க.!

முதல் துரோகம் - தமிழ்நாட்டு மாணவர்களின் உயிர்களை பலிவாங்கியிருக்கும் நீட் தேர்வை அனுமதித்தார்கள். அடுத்து, அந்த நீட் தேர்விற்கு எதிராக சட்டம் இயற்றுவதாக நாடகமாடிவிட்டு, அந்தச் சட்டமசோதாவை ஒனராக இருக்கும் பா.ஜ.க. அரசு திருப்பி அனுப்பியதையே, சட்டமன்றத்தில் சொல்லாமல் ஓராண்டு காலம் மறைத்தார்கள். மாணவர்களுக்கு துரோகம் செய்தார்கள்.

அடுத்து, மின் கட்டண உயர்வுக்கு காரணமாக இருக்கும் உதய் மின் திட்டத்தில் கையெழுத்து போட்டும், அதேபோல், மூன்று வேளாண் சட்டங்களை ஆதரித்தும் - போராடிய விவசாயிகளை கொச்சைப்படுத்தியும், விவசாயிகளுக்கு துரோகம் செய்தார்கள்.

பணமதிப்பிழப்பு நடவடிக்கையால், எப்படி உங்கள் சுருக்குப் பையில் இருக்கும் பணத்தை பறித்தார்களோ, அதேபோன்று, நூறு நாள் வேலைத்திட்டத்தை நாசப்படுத்தி, உங்களின் தினசரி வாழ்வாதாரத்திற்கு துரோகம் செய்தார்கள்.

அடுத்து, இன்றைக்கு நாமெல்லாம், “கீழடி தமிழர் தாய்மடி” என்று பெருமையாகச் சொல்கிறோம். அந்தக் கீழடி ஆய்வுகளையெல்லாம் குழி தோண்டி புதைக்கப் பார்த்து, தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்தார்கள்.

குடியுரிமைத் திருத்தச் சட்டம், வக்பு திருத்தச் சட்டம் கொண்டு வந்து, இசுலாமிய மக்களுக்கு துரோகம் செய்தார்கள்.

கிறிஸ்தவர்களுக்கு செய்துள்ள துரோகம்!

இப்போது, F.C.R.A. சட்டம் கொண்டுவந்து, சொத்துகளை அபகரித்து, கிறிஸ்தவச் சமுதாய மக்களுக்கு, துரோகம் செய்யத் துடிக்கிறார்கள்.

இந்திக்கும் - சமஸ்கிருதத்திற்கும் மட்டுமே அதிக நிதி ஒதுக்கி அன்னைத் தமிழுக்கு துரோகம் செய்கிறார்கள்!

மும்மொழிக் கொள்கையைத் திணித்தும் - அதை ஆதரித்தும் - ஐம்பது ஆண்டுகளாக, தமிழ்நாட்டைப் பாதுகாக்கும் இருமொழிக் கொள்கைக்கு துரோகம் செய்கிறார்கள்.

மெட்ரோ ரயில் திட்டம் - கல்வி நிதி உள்ளிட்டவற்றை தடுத்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு துரோகம் செய்கிறார்கள்!

இதுதான் - N.D.A. கூட்டணி.

தமிழ்நாடு வளம்பெற
இந்த நல்லாட்சி தொடர
ஆதரிப்பீர்!

துரோகங்களால், தமிழ்நாட்டின் வளர்ச்சியைக் கெடுக்க நினைக்கும் N.D.A... N.D.A. என்றால், உங்களுக்கு புரிவதுபோன்று ஈசியாக சொல்கிறேன். No Development Alliance–தான்... N - No; D-Development. A - Alliance. அதுதான் தற்போது N.D.A.

இவ்வளவு துரோகங்களையும் செய்துவிட்டு, கூச்சமே இல்லாமல், மக்களிடம் வாக்கு கேட்டு வருகிறார்கள்.

### அ.தி.மு.க. பா.ஜ.க.வின் சதித்திட்டத்தை முறியடிப்போம்!

இவர்களின் சதித் திட்டத்தை முறியடித்து, தமிழ்நாட்டை முன்னேற்றப் பாதையில் அழைத்துக் கொண்டு செல்ல வேண்டும் என்றுதான், நாம் சூப்பர்ஸ்டாரை களத்தில் இறக்கியிருக்கிறோம்! 2026 தேர்தலின் சூப்பர்ஸ்டார் யார்? தேர்தல் அறிக்கை... சூப்பர்ஸ்டார் யார்? “சூப்பர்ஸ்டார் யாருனு கேட்டா... சின்னக் குழந்தையும் சொல்லும்” தேர்தல் அறிக்கை என்று சொல்லும், அது தான்..! நான் பிரசாரத்திற்குக் கிளம்புவதற்கு முன்பே, நம்முடைய சூப்பர்ஸ்டார் நமக்காகப் பிரசாரத்தை தொடங்கிவிட்டார்.

நன்றாக கவனியுங்கள்... வாக்கு எண்ணப்படும் மே 4 - அந்த நாளை கல்யாண நாள் என்று சொல்கிறார்கள். நான் தேர்தல் அறிக்கை வெளியிட்ட நாள்தான், நம் வெற்றிக்கு நிச்சயதார்த்த நாள்! அப்படிப்பட்ட அறிவிப்புகள் இந்தத் தேர்தல் அறிக்கையில் நிறைய இருக்கிறது. அதில் இருக்கும் டாப் அறிவிப்புகளை மட்டும் இப்போது சொல்கிறேன்.

அது என்ன? இல்லத்தரசி திட்டம்! ஃபர்ஸ்ட் பாலே சிக்சர்தான்! இல்லத்தரசி திட்டத்தில் எவ்வளவு ரூபாய்க்கு கூப்பன் தரப் போகிறோம்? எட்டாயிரம் ரூபாய்... இந்தக் கூப்பனை வைத்து, உங்களுக்குத் தேவைப்படும் வீட்டு உபயோகப் பொருளை, புதிதாகவும் வாங்கிக் கொள்ளலாம், இல்லையென்றால், பழைய பொருளை எக்ஸ்சேஞ் செய்து புதிய பொருளையும் வாங்கிக் கொள்ளலாம். உங்களுக்குப் பிடித்த கடையில், உங்களுக்குப் பிடித்த பிராண்ட்–ஐ வாங்கிக் கொள்ளலாம். என்னென்ன? வாஷிங் மெஷின், ஃபிரிட்ஜ், டி.வி., கிரைண்டர், மிக்சி, மைக்ரோ–வேவ் அவன், மின் அடுப்பு இதையெல்லாம் வாங்குவதற்கு இப்போதே பெண்கள் எல்லாம் திட்டம் போட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்ன வாங்கலாம் என்று இப்போதே பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

இதில் உங்களின் கணவர் உள்ளிட்ட யாரையும் குறுக்கிட விட்டுவிடாதீர்கள்... நீங்கள் உங்கள் இஷ்டத்திற்கு வாங்குங்கள். உங்கள் சாய்ஸ் அது... அவர்கள் எடுக்கட்டும் என்று விட்டுவிடாதீர்கள்.

### பெண்களுக்கான சிறப்புத் திட்டம்!

நீங்கள் புடவை வாங்குவதற்கு கடைக்குச் செல்கிறீர்கள் அல்லவா... ஒரு புடவைதானே வாங்கப் போகிறீர்கள். ஆனால், அந்தக் கடைகளில் உள்ள எல்லாப் புடவைகளையும் ஷோகேஸ்-இல் இருந்து எடுத்து கீழே போட சொல்லி, ஒவ்வொன்றாக பிரித்துப் பார்த்து, தொட்டுப் பார்த்து, தடவிப் பார்த்து, ஒரு புடவையை வாங்க 250 புடவையை கீழே போடுவார்கள் அவர்கள். ஒவ்வொன்றாக கேள்விகளைக் கேட்பீர்கள். சில்க்கா? நைலக்சா? காட்டனா? தண்ணீரில் போட்டால் சுருங்குமா? சாயம் போகுமா? இவ்வளவு கேள்வி... ஒரு புடவை வாங்க... அவர்கள் கடையில் இருக்கும் லைட்டை எல்லாம் நம்பமாட்டீர்கள் நீங்கள். என்ன செய்வீர்கள்? அந்தப் புடவையை எடுத்துக் கொண்டு வெளியே சென்று வெயிலில் சூரிய வெளிச்சத்தில் பார்ப்பீர்கள். இதெல்லாம் உனக்கு எப்படி அனுபவம் என்று என்னை கேட்டுவிடாதீர்கள். எதார்த்த நிலையைச் சொல்கிறேன்.

என்னைப் பொருத்தவரை, நம்முடைய குடும்ப தலைவிகளின் வீட்டு வேலை சுமை குறைய வேண்டும். அதற்காகதான் இந்தத் திட்டமே...

எப்படி தலைவர் கலைஞர் அவர்கள் சொன்னபடியே கலர் டிவியும், கேஸ் அடுப்பும் கொடுத்தாரே! அவருடைய மகனான நானும், சொன்னபடியே இல்லத்தரசி திட்டத்தை நிறைவேற்றுவேன்.

இதுமட்டுமல்ல, தேர்தல் அறிக்கையில் மற்ற வாக்குறுதிகளையும் இன்னும் விரிவாக சொல்லியிருக்கிறோம். இது அனைத்தையும் செய்வோம் என்ற நம்பிக்கை, எனக்கு மட்டுமல்ல; ஒட்டு மொத்த தமிழ்நாட்டு மக்களுக்கும் இருக்கிறது. ஏனெனில், சொன்னதைச் செய்த கலைஞரின் மகன் நான்! சொன்னதை மட்டுமல்ல, சொல்லாததையும் அதிரடியாக செய்யும் ஸ்டாலின் நான்! செய்தேன் அல்லவா அதிரடியாக... இந்தியாவே திரும்பிப் பார்ப்பது மாதிரியான கலைஞர் மகளிர் உரிமைத்திட்டத்தில், காலையில் 5 மணிக்கே 5 ஆயிரம் ரூபாய் போட்டுவிட்டோம். எல்லோருக்கும் இன்ப அதிர்ச்சி...

விடியல் பயணம், நான் முதல்வன், மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம், நம்மைக் காக்கும் 48, புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் என ஏராளமான திட்டங்களை செயல்படுத்திக் கொண்டு வருகிறோம்.

### ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆய்வு நடத்தியுள்ளேன்!

என்னைப் பொறுத்தவரையில், கோட்டையில் இருந்து மட்டும்தான், வேலை செய்ய வேண்டும்; ஆட்சி செய்ய வேண்டும் என்று இல்லை. மக்களுடன் மக்களாக - உங்களில் ஒருவனாக ஆட்சி செய்பவன். மாவட்ட அளவில் அரசு நிகழ்ச்சிகளுக்கு வந்தால்கூட, நிகழ்ச்சிக்கு வந்தோம், நலத்திட்ட உதவிகளை வழங்கினோம், கிளம்பினோம் என்று இருக்க மாட்டேன். மாவட்ட கலெக்டர் உள்ளிட்ட அதிகாரிகள் உடன் ரிவியூ மீட்டிங் போடுவேன். அந்த மாவட்டத்தில் இருக்கும் இடங்களுக்கு சர்பிரைஸாக ஆய்வுக்குச் செல்வேன். அவர்களுக்கே தெரியாது. திடீர் திடீர் என்று செல்வேன். உடன் இருக்கும் எங்கள் எம்.எல்.ஏ.க்களுக்கே தெரியாது. அமைச்சர்களுக்கே புரியாது. அங்கே ஏதாவது குறை இருந்தால் அதைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பேன்.

## பெருந்தலைவர்களிடம் நேரில் பழகிய எனக்கு இந்த பழனிசாமிக்கு பதில் சொல்லும் நிலை!

நம்முடைய விழுப்புரத்தில்கூட, ஒலக்கூர் ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வு மேற்கொண்டதை மறந்திருக்க மாட்டீர்கள். இப்படி ஒவ்வொரு மாவட்டத்திற்கும், ஒவ்வொரு கிராமத்திற்கும் செல்வதால்தான், அந்தந்த ஊர்களுக்கு தேவை என்ன என்பதை கவனித்து, செய்து கொடுக்க முடிந்தது.

இப்படி, நான் ஒவ்வொரு மேடையிலும் - ஒவ்வொரு ஊரிலும் நம்முடைய சாதனைத் திட்டங்களை பட்டியலிட்டுச் சொல்கிறேன் அல்லவா... இதுபோன்று, பழனிசாமியால் லிஸ்ட் போட முடியுமா? சொல்வதற்கு உண்மைகள் இல்லாத காரணத்தினால், பொய்களை வாந்தி எடுத்துக் கொண்டு இருக்கிறார்.

அம்மா பல்கலைக்கழகம் உள்ளிட்ட திட்டங்களை தடுத்துவிட்டோம் என்று பொய்களைக் கட்டவிழ்த்துவிட்டுப் போயிருக்கிறார்.

2021-ல் தேர்தல் அறிவித்த நாள் அன்றுதான், அந்தப் பல்கலைக்கழகத்தை அவசரம் அவசரமாக அறிவித்து, வெறும் பத்துக்கு நான்கு அளவில் அறிவிப்பு பலகை வைத்துவிட்டுச் சென்றார்கள். அந்தப் பல்கலைக்கழகம் உருவாக நிதி ஒதுக்கினார்களா? இல்லையே! நாங்கள்தான், மாணவர்கள் பாதிக்கப்படக் கூடாது என்று அந்தப் பல்கலைக்கழகத்திற்கான மாணவர்களை, புகழ் பெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழகத்துடன் இணைத்து, படிப்பைத் தொடர வைத்தோம்.

திண்டிவனத்தில் தொடங்கிய அண்ணா பல்கலைக்கழகம்!

அதுமட்டுமல்ல, விழுப்புரத்தை அடுத்த கா.குப்பம் மற்றும் திண்டிவனத்தில் அண்ணா பல்கலைக்கழகத்தின் கீழ் அண்ணா அரசு பொறியியல் கல்லூரி தொடங்கப்பட்டு, மாணவர்கள் இன்றைக்கு படித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அதேபோன்று, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு கலைக் கல்லூரி என, திருவெண்ணெய்நல்லூர், திருக்கோவிலூர், செஞ்சி, விக்கிரவாண்டி தொகுதி அன்னியூரில் புதிதாகக் கலைக் கல்லூரி தொடங்கப்பட்டு, ஆயிரக்கணக்கான கிராமப்புற மாணவர்கள் படித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

பழனிசாமி அவர்களே... சாதனைக்கு மட்டுமல்ல; உங்களுடைய ஒவ்வொரு பொய்க்கும் என்னால் புள்ளிவிவரங்களோடு பதிலடி தர முடியும்.

தோல்வி பயத்தில் பழனிசாமி தினம் தராதரம் இல்லாமல் தரங்கெட்டு பேசுகிறார். இன்றைக்கு மாலை சென்னையில் என்னைப் பற்றி என்ன சொல்லியிருக்கிறார் தெரியுமா? தி.மு.க. ஆட்சியில் கொரோனா வந்திருந்தால், இவரே போயிருப்பார் என்று என்னை பேசியிருக்கிறார். பழனிசாமி அவர்களே... என் மரணத்தை பற்றி பேசுகிறீர்களே... மரணத்தைப் பார்த்து கலங்கக் கூடியவனோ, பயப்படுகிறவனோ நான் அல்ல. இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின், 1976-இல் நீங்கள் அரசியலுக்கு வருவதற்கு முன்பே, 23 வயதில் மிசாவில் கைது செய்யப்பட்டு சிறைக் கொடுமைக்கு ஆளானவன் நான். ஓராண்டு காலம் நெஞ்சுரத்தோடு சிறையில் இருந்தவன் நான். பொதுவாழ்க்கையில் எல்லாவற்றையும் எதிர்கொண்டுதான் ஆக வேண்டும் என்று என்னை சிறைக்கு அனுப்பி வைத்தவர் என்னுடைய ஆருயிர் தலைவர் என்னுடைய தந்தை கலைஞர் அவர்கள். கொடுஞ்சிறையின் கொடுமைக்கே பயப்படாதவன் நான், இந்தக் கொரோனாவுக்கா பயப்படப் போகிறேன்?

### யாரிடமும் சொல்லாமல் துணிச்சலாக கொரோனா வார்டுக்குள் சென்றேன்!

கொரோனா மேல் அனைவரும் பெரும் அச்சத்தில் இருந்தபோதே, அதற்கான PPE உடை அணிந்து கொண்டு கொரோனா வார்டுக்குள் சென்றவன்தான் இந்த ஸ்டாலின். இதுவரை யாருக்கும் சொல்லாததை இப்போது சொல்கிறேன்... இவ்வாறு நான் கொரோனா வார்டுக்குள் செல்லப் போகிறேன் என்று யாரிடமும் நான் சொல்லவில்லை. கலெக்டர், அமைச்சர்கள், எல்.எல்.ஏ.க்கள், என் உதவியாளர்கள் என்று அனைவரும் இருந்தார்கள். ஆனால் யாரிடமும் நான் சொல்லவில்லை. இப்படி நான் சொல்லாமல் சென்ற காரணத்தினால், என் மனைவி துர்காவதி என்னிடம் கோபித்துக் கொண்டு ஒரு வாரம் பேசாமல் இருந்தார். இது சத்தியம்... மக்களைக் காக்க எந்தளவுக்கும் துணிச்சலாக செல்லக்கூடியவன். அதற்கெல்லாம் பயந்து அரசியல் தலைவராக நான் இல்லை.

பழனிசாமியின் கீழ்த்தரமான பேச்சைக் கேட்ட பிறகு, என்னுடைய வருத்தம் எல்லாம் என்ன தெரியுமா? தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர்., இனமானப் பேராசிரியர் என்று எத்தனையோ பண்பாடுமிக்க பெருந்தலைவர்களிடம் நேரில் பழகக்கூடிய நீண்ட அரசியல் அனுபவம் கொண்ட நான், இன்று இவருக்கெல்லாம் பதில் சொல்லும் நிலை இருக்கிறதே என்று உண்மையிலேயே வருத்தப்படுகிறேன்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளரான பின்பு பழனிசாமி வென்றதே இல்லை. தி.மு.க. தலைவரான பின் உங்கள் ஆதரவால் நான் தோற்றதே இல்லை.

### பா.ஜ.க. எனும் பேரழிவு!

பா.ஜ.க. எனும் பேரழிவை தமிழ்நாட்டிற்குள் கொண்டுவர நினைக்கும் அடிமை பழனிசாமிக்கு, தமிழ்நாட்டு மக்கள் கடுமையான தண்டனையை இந்தத் தேர்தலில் கொடுக்க வேண்டும்.

உண்மையில், நடக்கும் தேர்தல் என்பது, டெல்லிக்கும் - தமிழ்நாட்டுக்கும் நடக்கும் தேர்தல். தமிழ்நாட்டுக்கு துரோகம் செய்யும் பத்து தோல்வி பழனிசாமிக்கு, பதினோராவது தோல்வியை கொடுத்து விரட்ட வேண்டும். டபுள் எஞ்சின், டப்பா எஞ்சின் என்று சொல்லிக் கொண்டு, டெல்லியின் ரிமோட் கண்ட்ரோலுக்கு ஆடும் அடிமைகள் தமிழ்நாட்டை ஆளக் கூடாது! தமிழ்நாட்டை நாசப்படுத்த நினைக்கும் ஆணவ பா.ஜ.க.வும், அடிமை அ.தி.மு.க.வும் வேரோடும் வேரடி மண்ணோடும் வீழ்த்தப்பட வேண்டும். அதற்கு, திராவிட முன்னேற்றக் கழகம்தான் மீண்டும் ஆட்சி அமைக்க வேண்டும்.

### கலைஞரின் மகனாக கேட்கிறேன்.

திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைய, விழுப்புரம் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் டாக்டர் லட்சுமணன் அவர்களுக்கும், திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் டாக்டர் பொன். கௌதம சிகாமணி அவர்களுக்கும், செஞ்சி சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் செஞ்சி மஸ்தான் அவர்களுக்கும், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் அன்னியூர் சிவா அவர்களுக்கும், வானூர் சட்டமன்றத் தொகுதியில் நமது வெல்லும் வேட்பாளர் கௌதம் திராவிட மணி அவர்களுக்கும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றிபெற வைக்க வேண்டும்.

### சாதனைகளால் சிறக்கும் தமிழ்நாடு!

அதே போன்று, மயிலம் சட்டமன்றத் தொகுதியில் நமது தோழமைக் கட்சியான தே.மு.தி.க.-வின் வெல்லும் வேட்பாளர், நினைவில் வாழும் அருமை நண்பர் கேப்டன் அவர்களின் அன்பைப் பெற்ற எல். வெங்கடேசன் அவர்களுக்கு ‘முரசு’ சின்னத்தில் நீங்கள் ஆதரித்து பெருவாரியான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைக்க வேண்டும்.

திண்டிவனம் சட்டமன்றத் தொகுதியில் நமது தோழமை இயக்கமாம் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த, எழுச்சித் தமிழர், கலைஞரால் மேஜர் ஜெனரல் என்று அழைக்கப்பட்ட திருமாவளவன் அவர்களின் அன்பைப் பெற்ற வெல்லும் வேட்பாளர் வன்னி அரசு அவர்களுக்கு, ‘பானை’ சின்னத்தில் நீங்கள் உங்களுடைய பொன்னான வாக்குகளை அளிக்க வேண்டும்.

தமிழ்நாட்டு மக்களின் ஒட்டுமொத்த விருப்பமாக அமையவுள்ள திராவிட மாடல் 2.0 ஆட்சியில் சாதனைகளால் சிறக்கும் தமிழ்நாடு! தலைநிமிர்ந்த தமிழ்நாடு உருவாகும்! அதற்கு உங்களுடைய இந்த ஸ்டாலின் கேரண்டி!

தமிழ்நாடு மென்மேலும் வளர்ந்திட, திராவிட மாடல் நல்லாட்சி தொடர்ந்திட, ஆதரிப்பீர் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி வேட்பாளர்களை!

வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக! வெல்வோம் ஒன்றாக!

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.